**நிறுவனங்களுக்கான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும் அதில் கீழ்வரும் விடயங்கள் கவனத்தில் கொள்ள வேண்டும்**

பாதுகாப்பு அச்சுறுத்தலுக்கான வாய்ப்புக்கள் எங்கெங்கு உள்ளன என்பதைக் கண்டறிய வேண்டும்.
அலுவலகத்திலேயோ அல்லது பிரயாணத்தில் இருந்த பொழுதோ வழியில் தென்படுகின்ற நபர்களுடன் உரையாடக் கூடிய மொழியில் தேர்ச்சி பெற்றவர்கள் இருக்கிறார்களா? குறிப்பாக சிங்களம் தெரிந்தவர்கள் ஆங்கிலம் தெரிந்தவர்கள் பிரயாணத்தின் பொழுது இருப்பது மிக அவசியம்.

அதே போன்று நிறுவனத்திலே தொலைபேசியிலே உரையாடுவதற்கு மொழித்தேர்ச்சி உள்ளவர்கள் வைத்துக் கொள்வது அவசியம்
வீதி ஓரத்தில் உள்ள பரிசோதனை நிலையங்களிலேயே எவ்வாறு நடந்து கொள்வது என்பது பற்றிய விதி முறைகள் தெரிந்து கொள்ள வேண்டும்
வாகனங்களில் செல்லுகின்ற பொழுது வாகனங்களுக்குரிய ஆவணங்கள் யாவும் கொண்டு செல்ல வேண்டும்
தூரப் பிரயாணம் புறப்படுவதற்கு முன்னராக நாட்டின் நிலைமைகளை செய்திகளைக் கேட்டறிந்து கொண்டு பிரயாணத்தை ஆரம்பிக்கவும்
தூரப்பிரயாணம் செல்கின்ற பொழுது இடையிடையே தொலைபேசி மூலம் தகவல்களை பெற்றுச் செல்ல வேண்டும்
ஒரு நெருக்கடி நிலமை வருகின்ற பொழுது எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும்.
என்ன என்ன பொருட்களை எடுத்துச் செல்ல வேண்டும் பிரயாணம் செய்பவர்கள் எத்தகைய தொடர்பு சாதணங்களைக் கொண்டு செல்ல வேண்டும் எமக்கு பொருத்தமானது கையடக்க தொலைபேசி

அலுவலகம் எவ்வாறு ஒழுங்கமைக்கப்பட வேண்டும்
செயற்பாடுகளைக் கட்டுப்படுத்தப்பட்டிருக்க வேண்டும்
அலுவலகத்தில் பாதுகாப்பாகப் பூட்டி வைக்கப்பட்டிருக்க வேண்டிய ஆவணங்கள் கணக்குப்புத்தகம் தனிப்பட்ட நபர்களுடைய கடிதக் கோவைகள் பொருட்கள் கட்டிடங்கள் சொத்துக்களுக்கான முக்கியமான உறுதிகள் ஆவணங்கள் பற்றுச் சீட்டுக்கள் மீள் பாதுகாப்பு அட்டவணை பல பொருளிருப்புப் புத்தகம் கணணியில் பதியப்பட்ட முக்கிய தகவல்கள் அடங்கிய CD க்கள் தொலைபேசி இலக்கங்கள் முகவரி தொடர்பாளர்களுடைய விபரங்கள் போன்றவை

**அலுவலக கட்டிடத்திற்கு இருக்க வேண்டிய பாதுகாப்புக்கள்**
வாசல் கதவுகளுக்கு பாதுகாப்புக்கள் உள்ளனவா
பாதுகாப்பாளர்கள் நியமிக்கப்பட்டு உள்ளார்களா
தினசரி பூட்டுத் திறப்புகள் யார் பூட்டிச் செல்வது
இதற்குப் பொறுப்பாக ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளாரா
இத்திறப்புக்கள் யாவையும் வைப்பதற்காக ஒரு இடம் ஒதுக்கப்பட்டுள்ளதா அலுவலகத்தில் வெளியாளர்கள் வரும் போது அவர்கள் பற்றிய பதிவேடுகள் மேற் கொள்ளப்படுகின்றனவா
வெளியாளர்கள் வந்து அலுவலகத்தில் ஏனையோரை சந்திப்பதற்கு என்று தனியான ஓதுக்கிடம் உள்ளதா
பணியாளர்களுடைய பாதுகாப்பு சம்பந்தமாக ஒழுங்குகள் எவ்வாறு உள்ளன
அவர்களது பெயர் முகவரி புகைப்படத்துடனான தகவல்கள் அவரகளுடைய முக்கியமான கல்வித் தகமைகுரிய ஆவணங்கள் கிராம சேவகருடைய நற் சான்றிதழ்கள் போன்றவை இணைக்கப்பட்டிருத்தல்
மோட்டார் சைக்கிள் வேறு வாகனங்கள் பாவிப்பவர்கள் தாமே இவற்றிற்கு பொறுப்பு என்றும் இதனால் ஏற்படுகின்ற பிழைகளுக்கு தாமே பொறுப்பேற்கின்றோம் என்றும் இதனால் ஏற்படுகின்ற பிரச்சனைகளுக்கு பொறுப்பாழிகள் என்றும் எழுதித் தரப்பட்ட கடிதப் பிரதி அலுவலகத்தில் கோவையில் வைத்திருக்கப்பட வேண்டும்
மாதாந்தம் அலுவலகத்தில் பாதுகாப்பு நிலமை தொடர்பான ஆராய்வு ஒன்று செய்யப்பட்டு அதற்கு ஏற்ப திட்டங்களின் செயற்பாடு பணியாளர்களுடைய நடவடிக்கைகள் வெளியிடப் பிரயாணங்கள் செயற் திட்டங்கள் என்பன தீர்மானிக்கப் பட வேண்டும்
பாதுகாப்புப் படைகளுடன் ஆயுதக் குழுக்களுடன் எவ்வாறு தாம் நடந்து கொள்வது என்பது தொர்பான நடைமுறை ஒன்று ஏற்படுத்தப்பட வேண்டும்
இதில் யார் இவர்களுடன் தொடர்பு கொள்வது எந்த முறையான தொடர்புகளை வைத்துக் கொள்வது போன்ற விபரங்கள் குறிக்கப்பட்டிருக்க வேண்டும்
அரசாங்க அதிகாரிகளுடன் தகவல்கள் பரிமாற்றம் அவர்களுடைய அங்கிகாரத்தைப் பெறுவதற்கான நடவடிக்கைகள் உறவைக் கட்டியெழுப்புவதற்கான நடவடிக்கைகள் தொடர்பான செயற்திட்டங்கள் போடப்பட வேண்டும்

அடுத்து பொது மக்களின் பிரபல்லியமானவர்களுடன் தொடர்புகளைவைத்து நிறுவனத்திற்கு ஆபத்தது ஏற்படும் வேளைகளில் அவர்கள் முன்வந்து உதவக் கூடிய நிலமையை உருவாக்க வேண்டும்
மக்களிடையே நிறுவனம் பற்றிய தவறான அபிப்பிராயங்கள் உடனடியாக அதனைத் தீர்த்து வைப்பதற்குரிய உபாயங்கள் வகுக்கப்படல் வேண்டும்
ஏனைய நிறுவனங்களுடனும் தகவல்களைப் அவ்வப்போது பரிமாறி பரிசீலித்து தகவலின் உண்மைத் தன்மையை அறிந்து கொள்ள வேண்டும்
நிதி தரும் நிறுவனங்களோடு எத்தகைய உறவுகளை வைத்துக் கொள்ள வேண்டும் அவர்கள் நம்பகத்தன்மையை எவ்வாறு கட்டிஎழுப்ப வேண்டும்
நிறுவன நீண்ட கால நன்நோக்கில் நிறுவனத்துடன் நல்லுறவைப் பேணுவதற்கான வழிமுறைகள் என்ன என்பதனை பற்றி ஆராயப்பட வேண்டும்
ஏனைய நிறுவனங்களுடன் கலந்துரையாடி அவர்களுடைய ஆலோசனைபெறுவதனூடாக மற்றவர்களுடைய விடயங்கள் எமக்கு பாடமாக அமையும்

## திட்டங்கள் ஒன்றை உருவாக்கு கின்ற போது கவனத்தில் கொள்ளப்பட வேண்டியது

உள்ளூர் மக்கள் எம்மை ஏற்றுக் கொள்ளுகிறார்களா
மக்களுடைய கருத்து இத்திட்டத்தில் அறியப்பட்டதா
உள்ளூர் தலைவர்களுடய கருத்து அறியப்பட்டதா அங்குள்ள உள்ளூர் அதிகாரிகள் கிராம சேவகர்களுடைய கருத்துக்கள் அறியப்பட்டதா
தப்பபிப்பிராயங் கொண்ட மக்கள் அல்லது ஏமாற்றமடைந்த மக்களை எவ்வாறு நாம் சமாளிக்கப் போகிறோம்
உங்கள் செயற் திட்டத்தால் நேரடியாகப் பயன் பெறப் போகின்றவர்கள் யார் இதை ஆதரிக்கப் போகின்றவர்கள் யார்
இதனால் தமது நலன்கள் பாதிக்கப்படும் என்று நினைக் கின்றவர்கள் யார்
எதிர்க்கப் போவது யார்
எந்த விதமான ஊழல்கள் எங்கள் திட்டத்தில் ஏற்பட வழி இருக்கிறது
இதை எவ்வாறு தவிர்க்கப்போகிறீர்கள்
இதற்கான கண்காணிப்பு முறை என்ன
திட்டத்திற்கான பொருட்கள் கொள்வனவு இதற்கான பாதுகத்து வைப்பது சரியான விநியோகம் தரமான பொருட்கள் கொள்வனவு போன்ற வற்றை எவ்வாறு உறுதிப்படுத்தப் போகிறீர்கள்
எத்தகைய கண்காணிப்பு முறையையும் மதிப்பீட்டு முறையையும் செய்யப் போகிறீர்கள்

## சமூகத்தில் ஏற்படும் பிரச்சனைகளை சமாளிப்பதற்கான சில வழிமுறைகள்

பணியாளர்கள் எப்போதும் நட்புடன் பழக வேண்டும்
மற்றவர்களுக்கு மரியாதை கொடுக்க வேண்டும் விடயங்களைத் தெரிந்தவர்களாக இருக்க வேண்டும் கூடிய விபரங்களை அறிந்து கொண்டிருக்க வேண்டும் தகவல்களை கைகளிலே வைத்திருக்க வேண்டும் மற்றவர்கள் பேசக் கூடிய மொழியை நாமும் பேசக் கூடியவர்களாக இருக்க வேண்டும்
உள்ளூர் கலாச்சாரத்தை ஏற்கும் வகையிலே ஆடைகளை அணிய வேண்டும்
மக்களிடம் பாரபட்சம் காட்டாது இருக்க வேண்டும்
ஒருசாராரிற்கு மட்டும் முன்னுரிமை அழிகாதவராக இருக்க வேண்டும்
பாதுகாப்பு ஏற்பாடுகள் நடவடிக்கைகள் என்பவற்றை மதிக்க வேண்டும்
வழமைக்கு மாறாக ஏதுவும் நடை பெற்றிருந்தால் அதை கவனத்தில் எடுத்து நடவடிக்கை எடுக்க வேண்டும்
உங்கள் உடமைகளுக்கு நீங்களே பொறுப்பு எடுத்து பத்திரமாக வைத்திருக்க வேண்டும் உங்கள் பொருட்களை கவனமாக பூட்டி வைத்திருக் வேண்டும்
பணம் அடையாள அட்டை போன்றவற்றை தனியாக வைத்துக் கொள்வதற்கு ஏற்பாடுகள் இருக்க வேண்டும்
புதியவர்களை வாகனங்களில் ஏற்றவும் ' கூடாது
புதியவர்களுடைய வாகனங்களில் நீங்கள் ஏறவும் கூடாது
உங்களை யாராவது பின் தொடர்கின்றார்கள் என்றால் பாதையை மாற்ற வேண்டும் பொருத்தமற்றவர்களிடம் புதிய இடங்களுக்குச் செல்வதற்கு வழி கேட்கக் கூடாது
தூரப் பிரயாணம் செல்பவர்கள் ஒரு Toach Light வைத்துக் கொள்ள வேண்டும்
ஒரு விசிலும் வைத்துக் கொள்ள வேண்டும் ஆபத்து வேளையில் ஊதி உதவி பெறுவதற்கு
இரவிலே வீட்டின் வெளிப்பக்கங்கள் அலுவலகத்தின் வெளிப்ப பக்கங்கள் Light எரியவிட வேண்டும் உள் பகுதி இருட்டாக இருப்பது நன்று
புதிய இடங்களில் தங்கு கின்ற பொழுது உங்களுடைய அறையின் திறப்பு இலக்கத்தை மற்றவர்கள் பார்வைக்கு வைத்துக் கொள்ளக் கூடாது இதன் மூலம் உங்கள் அறையில் இருப்பவைகள் கவனிக்கப்படக் கூடும்

புதிய இடங்களில் Hotel களில் இருக்கின்ற பொழுது அறையைப் பூட்டி வைத்துக் கொள்ள வேண்டும்
உங்கள் நிறுவனத்தின் வளங்களை தேவைக்கு அதிகமாகவோ தவறாகவோ பயன்படுத்தக் கூடாது
வெளியிடங்களில் ஆரோக்கியக் குறைவான உணவுப் பொருளையே நீரையயோ அருந்துதல் கூடாது
பெண் பணியாளராயின் வெளிளியிடங்களுசக்குச் செல்லும் போது கூடிய கவனம் எடுக்க வேண்டும்
உங்கள் சுய பாதுகாப்பை உறுதிப்படுத்துவது நீங்களாக இருக்க வேண்டும்
உங்கள் நடவடிக்கைகள் நடத்தைகள் மற்றவர்களுக்கு கண்ணியப் படுத்துவதாக இருத்தல் வேண்டும்
பெரிய நிறுவனங்களின் தலைவர்கள் தமது வேலைகளை துரிதப்படுத்தவும் சிரமம் இன்றிச் செய்யவும் எப்பொழுதும் செல்லிடத் தொலைபேசிகளை வைத்துக் கொள்ள வேண்டும்
E-mail பெறுவதற்கான laptop அதற்கான தொலைத் தொடர்பு உபகரணங்கள் வைத்துக் கொள்ள வேண்டும்
உங்கள் கடிதத் தலைப்புகளை எப்பொழுதும் கோவையிலே வைத்துக் கொள்ள வேண்டும்
சிறிய Printer மெசின் ஒன்றும் உங்களுடன் கொண்டு செல்வது பயனுள்ளது உங்கள் நிறுவனத்தின் றபர் முத்திரை ஒன்றும் வைத்தக் கொள்வது நன்று

**வாகனங்கள் பராமரிப்பு**

வாகனத்திற்கான காப்புறுதி அதனுடைய ஆண்டு லைசன் பெறுவது
போதுமான எரி பொருள் உள்ளதா?
நீர் ஒயில் என்பன சரியாகப் பார்க்கப்பட்டுள்ளதா
மின்சார பியுஸ் மேலதியமாக உள்ளதா Touch Light உள்ளதா
சாவிப் பெட்டி வைக்கப்பட்டுள்ளதா
மேலதிகமான ரயறுக்கு காற்று உள்ளதா
கையடக்கத் தொலைபேசி உள்ளதா
தினசரி பார்ப்பதற்கான பரிசீலணைப் பட்டியல் உள்ளதா
Running Chart வைக்கப் பட்டுள்ளதா

**வாகனத்தை ஓட்டும்போது கவனிக்க வேண்டியது**
சாலை விதிகள் பின்பற்றப்பட வேண்டும்
சட்ட விதிகள் பின்பற்றப்பட வேண்டும்
பாதுகாப்பு நிலைகளின் போது நடந்து கொள்ள வேண்டியவை
வாகனத்தை மெதுவாக ஓட்டிச் செல்ல வேண்டும்
கண்ணாடிகள் பூட்டப்பட்டிருந்தால் பரிசோதனை நிலையம் வருவதற்கு முன்னராக அவை இறக்கப்பட பட வேண்டும்
வானொலிப் பெட்டி போடப்பட்டிருந்தால் அதனை நிறுத்தப்பட வேண்டும்
வருகின்ற பாதுகாப்புப் படையினருக்கு வணக்கம் சொல்ல வேண்டும்
இன்முகத்துடன் அவர்களை வரவேற்க வேண்டும்
நீங்கள் எங்கிருந்து வருகின்றீர்கள் எதற்காகச் செல்லுகின்றீர்கள் எங்கு செல்லுகின்றீர்கள் நீங்கள் யார் என்பதை அவர்களுக்கு அவர்கள் கேட்பதற்கு முன்பாகவே இன்முகத்துடன் அறிமுகம் செய்ய வேண்டும்
பொதுவாக வாகனங்கள் 60Km ற்கு மேல் செல்லக் கூடாது பாதை சரியில்லாத இடங்களில் மக்கள் நெரிசல் பகுதியிலும் 30, 40,Km வேகத்தில் செல்ல வேண்டும்

**நெருக்கடிகள் ஏற்படுகையில்....**
நிறுவனப் பணியாளர்களுக்கு ஆபத்து ஏற்படுத்துகின்ற அல்லது உயிர் அச்சுறுத்தல் விடுக்கின்ற அல்லது உயிர் அச்சுறுத்தல் ஏற்படுகின்ற சம்பவங்கள் எதுவாயினும் உடனடியாக தலைமைச் செயலகத்திற்கோ உரியவர்களுக்கோ அறிவித்து அது தொடர்பான மாற்று ஏற்பாடுகளை நடவடிக்கைகளைச் செய்வது ஒவ்வொரு பணியாளர்களுடைய கடமை ஆகும்
அறிக்கை இடுவதுடன் அறிக்கை உரியவர்களுக்கு கிடைத்திருக்கின்றதா அது தொடர்பாக மாற்று ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதா என்பதை அறிக்கை வழங்குபவர் உறுதி செய்ய வேண்டும்
இப்படியான அறிக்கை பெறுவதற்கு ஒருவர் அலுவலகத்தில் நிரந்தரமாக நியமிக்கப் பட்டுதல் வேண்டும்
நிறுவனத்தின் பணியாளர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டாலோ நிறுவனத்தின் சொத்துக்கள் களவாடப்பட்டாலோ அல்லது யாராவது அச்சுறுத்தல் விடுக்கபபட்டாலோ அல்லது நிறுவனத்தில் உள்ள பணியாளர்களுடைய உயிருக்கு ஆபத்து ஏற்பட்டாலோ உடனடியாக இது தொர்பாக நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட வேண்டும்

இப்படியான சம்பவங்கள் நடை பெறுகின்ற பொழுது பத்திரிகைகள் வானொலிச் செய்திகளை யாரும் பொறுப்பின்றிக் கூறக் கூடாது

ஏதாவது தகவல்கள் யாராவது கேட்டால் உரியவர்கள் மாத்திரமே இதற்குபதிலழிக்க வேண்டும்

ஏனையோர்கள் இதை உரியவர்களுடன் பேசுங்கள் என்று பதில் கூற வேண்டும் கர்த்தால்கள் நிறுவனங்கள் மீது அழுத்தங்கள் தாக்குதல்கள் அல்லது நெருக்கடி நிலமை தோன்று கின்ற போது ஏனைய நிறுவனங்கள் எவ்வாறு செயற்படுகின்றன என்பதைக் கலந்துரையாடி நீங்களும் ஒரு முடிவுக்கு வரலாம்

வேறு என்ன மாற்றுப் பாதுகாப்புகள் செய்யலாம் என்பதை உடனடியாக பொறுப்பான நபர்கள் கூடி முடிவு செய்தல் வேண்டும் அதை எல்லா மட்டத்தினருக்கும் அறிவிக்க வேண்டும்

பிரச்சனைகள் வருகின்ற பொழுது திடீர் என வேலையை நிறுத்தம் செய்யாமல் அல்லது அலுவலகச் செயற்பாடுகளை முடக்கி விடாமல் யார் யார் அதிகளவு வேலை செய்வது எந்த இடத்தில் இருந்து பணியாற்றுவது போக்குவரத்திற்கு ஏற்பாடுகள் என்ன குறைந்தளவு நேரத்தை ஒதுக்குபவர்கள் யார் தொலை தூரத்தில் இருப்பவர்களுக்கு என்ன மாற்று ஏற்பாடு பெண்கள் பாதுகாப்பிற்கு என்ன ஏற்பாடு இளைஞர்களுக்கு என்ன ஏற்பாடு போன்றனவை ஆராயப்பட்டு வேலைகள் தொடர்ந்து நடை பெற வேண்டும் நெருக்கடி வேளைகளின் போது தலைமைப் பீடத்தின் உத்தரவுகளுக்கு எல்லோரும் உடனடியாக அடிபணிந்து நடக்க வேண்டும்

நெருக்கடி வேளையின் பொழுது பல்வேறு பொறுப்புக்களை எடுத்துச் செய்பவர்களுக்கு தொடர்பு சாதன வசதிகள் விஸ்தரிக் வேண்டும்

அவர்களுடன் தொடர்புகளை மேற் கொள்வதற்கு அலுவலகத்தில் ஒருவர் பொறுப்பாக அலவலகத்தில் நியமிக்கப்பட வேண்டும்

இவருக்கு ஊடாக முக்கியமான நபர்களுக்கு அறிவித்தல் தொடந்து வழங்கப்பட்டிருக்க வேண்டும்

அதனுடைய குறிப்புகள் ஒரு தனியான புத்தகத்தில் இட வேண்டும்

பல்வேறு பொறுப்புகளை ஏற்று களத்திற்குச் செல்பவர்களுடைய விபரங்களை கவனமாக பதிந்து வைக்கப்பட்டிருக்க வேண்டும்

களத்திற்குச் செல்லும் நபர் யார் அவருடைய I.C இலக்கம் என்ன தொலைசேி இலக்கம் என்ன பாவிக்கப்படும் மோட்டார் சைக்கிளின் இலக்கம் என்ன போன்ற விபரங்கள் பதிந்து வைக்கப்பட்ட பின்பே நெருக்கடியான வேளைகளின்போது களத்திற்குச் செல்ல அனுமதிக்கப்பட்ட வேண்டும்

இதே போன்று களத்திற்கு பெறுமதிமிக்க பொருட்களையோ பணத்தையோ எடுத்துச் செல்பவர்கள் அதற்குரிய பாதுகாப்பு ஏற்பாடுகள் அலுவலகத்தில் மேற் கொள்ளப்பட்ட பின்னரே எடுத்துச் செல்ல வேண்டும்

ஒரு இடப் பெயர்வின் பொழுதோ அல்லது அவசரமாக இடத்தை மாற்றுகின்ற பொழுதோ முக்கியமான பொருட்கள் எடுத்துச் செல்ல வேண்டும் இவ்வாறு எடுத்துச் செல்லப்படும் பட்டியல் முக்கியமான நபர்களின் கையிலே பிரதிகள் எடுத்து வைக்க வேண்டும். இவற்றின் திறப்புக்கள் எங்கு பாதுகாப்பாக வைக்கப்பட்டிருக்கின்றன என்ற தகவல்கள் யாவையும் முக்கியமானவர்களுக்குத் தெரிந்திருக்க வேண்டும்

எமது பிரதேசங்களில் பாதுகாப்புப் படையுடன் தொர்பு கொள்வதற்கு என்று சிங்களம் நன்றாகப் பேசத் தெரிந்த ஒருவர் எம்முடன் பணியாற்றுவது விரும்பத்தக்கது

**சொத்துப் பாதுகாப்பு**

**சொத்துக்கள் பாதுகாக்கப்பட வேண்டும் என்றால் கீழ்வரும் நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட வேுண்டும்**

சொத்துக்கள் சம்பந்தமான பூரணான பதிவேடு பேணப்பட்டு அதிலே திகதி வாரியாக கொள்வனவு செய்யப்பட்ட பொருட்கள் சொத்துக்கள் அதனுடைய தற்காலப் பெறுமதி என்பன போடப்பட்ட இதனுடைய பிரதிகள் அலுவலலகங்களிலேயே முக்கியமான நபர்களினாலேயே பேணப்பட வேண்டும்

சொத்துக்கள் காப்புறுதி செய்யப்படுதல் வேண்டும்

இவற்றைப் பராமரிப்பது தொடர்பாக வேண்டிய பயிற்சிகளும் வழிகாட்டல்களும் வேண்டும்

இதற்கு வேண்டிய நடைமுறைக் கோவை ஒன்று உருவாக்கப்பட்ட வேண்டும் இவற்றிற்கு பழுது ஏற்பட்டால் உடனடியாக சீர் செய்யப்பட வேண்டும் அல்லது மேலும் பல பழுதுகளுக்கு இது வழிவகுத்துவிடும்

SOND